DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, PALLADAM

Calender

Miscellaneous Case No:CC 42 of 2019

Preliminary Register

Sessions

Deposition of Witness for PW 3

| | |
|---|---|
| Name | : திரு.ஜெய்சங்கர் |
| Age | : 41 |
| Father's/Husband's Name | : நடராஜன் |
| Village | : அருள்புரம் |
| Taluk | : பல்லடம் |
| Occupation | : வெல்டிங் ஒர்க்ஷாப் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 12th day of May 2022

முதல் விசாரணை: நாள்.12.05.2022

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக்கொண்டு வெல்டிங் ஒர்க் ஷாப் வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1, 2 ஐ எனக்கு தெரியும். கடந்த 29.07.2018 ஆம் தேதி மதியம் 12.30 மணிக்கு செல்வராஜ் கிரையம் பெற்ற இடத்தை பார்வையிடுவதற்காக சேடபாளையத்தில் உள்ள குமரன் கார்டனுக்கு சென்றிருந்தோம். அப்போது பழனிச்சாமி மற்றும் சில நபர்கள் இருந்தார்கள். பழனிச்சாமி, சங்கீதாவை கண்டாரோழி என்று தகாத வார்த்தையால் பேசி கிழே தள்ளிவிட்டார்கள். அதற்கு பின்னிட்டு அவரை பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம்.

சம்பவத்தின்போது நான் உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:

எதிரி ஆஜராகியிருந்தும், எதிரி தரப்பில் கு.வி செய்ய முன்வராததால் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டது.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA Digitally signed by K CHITHRA Date: 2022.05.12 17:58:09 +0530

நீதித்துறை நடுவர்
பல்லடம்

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, PALLADAM

| | |
|---|---|
| Calender | |
| Miscellaneous | Case No:CC 42 of 2019 |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | PW 2 |
| Name | : திரு.செல்வராஜ் |
| Age | : 46 |
| Father's/Husband's Name | : மாதப்பன் |
| Village | : அருள்புரம் |
| Taluk | : பல்லடம் |
| Occupation | : மளிகை கடை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 12th day of May 2022

முதல் விசாரணை: நாள்.12.05.2022

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக்கொண்டு மளிகை கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி. சுரேஷ்குமார் என்பவரிடமிருந்து 27.04.2018 ஆம் தேதியில் சேடபாளையத்தில் உள்ள குமரன் கார்டனில் 3 ¼ செண்ட் இடத்தை பதிவு கிரைய ஆவணத்தின்மூலம் கிரையம் வாங்கினோம். அந்த இடத்தின் முந்தைய மூன்று ஆவணங்களையும் என்னிடம் கொடுத்தார்கள். 2008 ல் வேலுச்சாமியிடமிருந்து ஞானசுந்தரம் வாங்கினார், அவரிடமிருந்து 2012 ல் சுரேஷ்குமார் கிரையம் பெற்று அவர் எங்களுக்கு கிரையம்

கொடுத்தார். 27.09.2018 ஆம் தேதியன்று மதியம் 12.30 மணியளவில் எங்களுடைய இடத்தில் வேலுச்சாமி மற்றும் அவரது மகன் கோகுலகிருஷ்ணன் ஆகியோர் கம்பி வேலி போடுவதாக பக்கத்தில் இருந்தவர்கள் எங்களிடம் தகவல் சொன்னார்கள். நானும், எனது மனைவியும் உடனடியாக அந்த இடத்திற்கு சென்று அவர்களிடம் கேட்டோம். அதற்கு வேலுச்சாமியும், ஆஜர் எதிரி கோகுலகிருஷ்ணனும் என் மனைவியை பார்த்து எங்களுடைய இடத்தை நாங்கள் விற்கவில்லை என்று கூறி தகாத வார்த்தையால் திட்டி என் மனைவியை பிடித்து கிழே தள்ளிவிட்டார். அதில் என் மனைவிக்கு காயம் ஏற்பட்டுவிட்டது. பின்பு பல்லடம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் சேர்த்தேன். மறுநாள் போலீசார் மருத்துவமனைக்கு வந்து என் மனைவியை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றுச்சென்றார்கள். போலீசார் வழக்கு பதிவு செய்து என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:

எதிரி ஆஜராகியிருந்தும், எதிரி தரப்பில் கு.வி செய்ய முன்வராததால் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டது.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA Digitally signed by K CHITHRA Date: 2022.05.12 17:58:18 +0530

நீதித்துறை நடுவர்
பல்லடம்

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, PALLADAM

Calender

Miscellaneous Case No:CC 42 of 2019

Preliminary Register

Sessions

Deposition of Witness for PW 1

Name : திருமதி.சங்கீதா

Age : 39

Father's/Husband's Name : செல்வராஜ்

Village : அருள்புரம்

Taluk : பல்லடம்

Occupation : மளிகை கடை

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 12th day of May 2022

முதல் விசாரணை: நாள்.12.05.2022

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக்கொண்டு மளிகை கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். சுரேஷ் என்பவரிடமிருந்து 27.04.2018 ஆம் தேதியில் சேடபாளையத்தில் உள்ள குமரன் கார்டனில் 3 ¼ செண்ட் இடத்தை பதிவு கிரைய ஆவணத்தின்மூலம் கிரையம் வாங்கினேன். அந்த இடத்தில் வீடு கட்டுவதற்காக லோன் போடுவதற்கு எக்விடாஸ் வங்கி அணுகினேன். அப்போது வேலுச்சாமி என்பவர் நான் கிரையம் பெற்ற இடத்தை விற்கவில்லை என்றும், லோன் போடக்கூடாது என்றும் கிரைய இடத்தில் பிரச்சனை செய்தார். 29.09.2018 ஆம்

தேதியன்று மதியம் 12.30 மணியளவில் என்னுடைய இடத்தில் வேலுச்சாமி கம்பி வேலி போடுவதாக எனக்கு தெரிந்த நபர்கள் என்னிடம் தகவல் சொன்னார்கள். நான் உடனடியாக அந்த இடத்திற்கு சென்று அவரிடம் கேட்டேன். அதற்கு வேலுச்சாமி என்னை பார்த்து என்னுடைய இடத்தை நான் விற்கவில்லை என்று கூறி என்னை பார்த்து போடி கண்டாரோழி, உனக்கு யார் இங்கு இடம் கொடுத்தார்கள் என்று கூறி என்னை பிடித்து கிழே தள்ளிவிட்டார். அதில் எனக்கு காயம் ஏற்பட்டுவிட்டது. பின்பு பல்லடம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். மறுநாள் போலீசார் மருத்துவமனைக்கு வந்து என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றுச்சென்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1. ஆகும். போலீசார் வழக்கு பதிவு செய்து என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:

எதிரி ஆஜராகியிருந்தும், எதிரி தரப்பில் கு.வி செய்ய முன்வராததால் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டது.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA Digitally signed by K CHITHRA Date: 2022.05.12 17:58:28 +0530

நீதித்துறை நடுவர்
பல்லடம்